**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண். 28/2021

நாள் : 21.10.2024

பி.வா.சா.2 திரு, முருகேசன் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் **வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 6 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததால் நான் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். நான் இவ்வாறு சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு சொந்தக்காரர் இல்லை. அவர் எனக்கு நன்கு பழக்கம் ஆனவர். எனது முதல் பிரமாணப்பத்திரிக்கையில் சொல்லியுள்ள விவரங்களை நான் தான் வழக்கறிஞருக்கு தெரிவித்தேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரிக்கையில் தாவா சொத்து குறித்து எனக்கு நன்கு விவரம் தெரியும் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்குண்டான சர்வே எண்ணை சொல்ல முடியுமா என்றால் எனக்குத் தெரியாது. சொத்துவிவரம் எனக்கு நன்கு தெரியும் என்று நான் பிரமாணப்பத்திரிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து வண்ணாங்குண்டு பஞ்சாயத்திற்கு சம்மந்தப்பட்டதாகும்.

நான் வசிக்கும் வீட்டிலிருந்து தாவா சொத்து உள்ள ஊரானது 16 கிமீ தொலைவில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள முதல் பிரமாணப்பத்திரிக்கையில் பக்கம் 2 ல் தாவா சொத்தினை பாகப்பிரிவினை செய்த விவரம் எனக்குத் தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த விவரத்தை பிரதிவாதி சொல்லித்தான் எனக்குத் தெரியும். இந்த வழக்கினை தவிர வேறு எந்த வழக்கிற்கும் நான் எந்த நீதிமன்றத்திலும் சாட்சியம் அளிக்க வரவில்லை. தாவா சொத்தானது முனி என்ற ரமணி என்பவருக்கு பிரத்தியேகமாக பாத்தியப்பட்ட சொத்து என எனது முதல் பிரமாணப்பத்திரிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி

சொத்தை அவர் சுயமாக சம்பாதித்து வாங்கினார் என்பதை காட்டுவதற்கான ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு எந்த ஆவணத்தையும் நான் பார்த்ததும் இல்லை.

முனி என்ற ரமணி யாரிடமிருந்து கிரையம் வாங்கியதாக எனக்குத் தெரியுமா என்றால் அவரது அம்மாவிடமிருந்து வாங்கியதாக நான் கேள்விப்பட்டேன். மேற்படி முனி என்ற ரமணி காலியிடமாகத்தான் கிரையம் பெற்றேன். நான் அவருடைய வீட்டிற்குத்தான் சென்றுள்ளேன். அவரது வீடானது இரண்டு தளம் ஆகும். தரைத்தளத்தை கட்டியது யார் என்று சொல்ல முடியுமா என்றால் முனி என்ற ரமணித்தான் கட்டினார். மேல்தளத்தை யார்கட்டினார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது. முனி என்ற ரமணி தலைமை ஆசிரியராக பணிபுரிந்துவிட்டு பணி ஓய்வு பெற்றுள்ளாரா என்றால் ஆசிரியராக இருந்து பணிஓய்வு பெற்றார்.

மேற்படி முனி என்ற ரமணி டியூசன் எடுத்தும், ஆசிரியராக பணிபுரிந்து தாவா சொத்தை காட்டியதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்திற்கான பட்டா எண் எனக்குத் தெரியாது. தாவா சொத்தின் பட்டா யார் பெயரில் இருப்பதாக நான் தெரிந்து கொண்டேனா என்றால் ரமணி என்பவர் பெயரில் இருப்பதாக கேட்டு தெரிந்துகொண்டேன். நான் இவ்வாறு சொல்வது தவறு என்றாலும், குடும்ப சொத்துக்கள் கூட்டுபட்டாவாகத்தான் இருக்கும் என்று சொன்னாலும் சரியல்ல. உயிலானது வெள்ளைத்தாளில் எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த உயிலானது எத்தனை பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது என்றால் 3 பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது, மேற்படி உயிலானது தமிழில் எழுதப்பட்டதா என்றால் இல்லை, ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. உயிலில் 4 பேர் கையொப்பம் போட்டுள்ளோம் என்றால் இல்லை. 2 பேர்தான் கையொப்பம் செய்துள்ளோம்.

உயிலானது எந்த வருடம் எழுதப்பட்டது என்றால் 13.05.2009 ல் எழுதப்பட்டது. உயிலானது 20 ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது, நான் 3 வது பக்கத்தில்தான் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். உயிலானது அவருடைய வீட்டில் வைத்துதான் எழுதப்பட்டது. ரமணியால் உயில் எழுதப்பட்ட தேதியில் அவர் இங்கு இல்லை என்றாலும், மதுரையில் தன் மகள் வீட்டில் இருந்துவந்தார் என்றால் சரியல்ல, இங்கு வைத்துதான் என்னிடம் கையெழுத்து வாங்கினார். உயிலில் 2 வது சாட்சியாக நான் கையொப்பம் போட்டுள்ளேன். நான் கையொப்பம் போட்டுள்ள போனாவின் மையும் உயில் எழுதப்பட்ட பேனாவின் மையும் வெவ்வேறானவை என்றால் சரிதான். மேற்படி உயிலில் 101 என வலதுபக்க மேல் ஓரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் நான் கையெழுத்து மட்டும்தான் போட்டேன். வழக்கிற்காக நோட்டில் இருந்து எடுத்த பேப்பரை வைத்து உயில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உயிலில் உள்ள வாசகங்களை ரமணி எனக்கு விளக்கம் சொல்லித்தான் நான் கையொப்பம் போட்டேன்.

உயிலில் சொத்துவிவரம் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அந்த விவரம் குறித்து முனி என்ற ரமணி எனக்குச் சொல்லவில்லை. உயில் எழுதப்பட்டுள்ள சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று எனக்குத் தெரியாது. முனி என்ற ரமணி என்னிடம் கையெழுத்து போடச்சொன்னதால் நான் பழக்க தோசத்தில் கையெழுத்து போட்டேன். என்னுடன் மற்றொரு சாட்சியாக கையொப்பம் செய்த நபரின் பெயர் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். செந்தில் என்பவர் கையொப்பம் செய்தார். அவர் எந்த வருடம் இறந்தார் என்று எனக்குத் தெரியாது. அந்த உயில் எழுதியபின்னர் அது பதிவு செய்யப்பட்டதா என நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை.

மேற்படி பதிவு செய்யப்படாத உயிலானது, அதை Probate செய்ய நீதிமன்றத்தின் மூலம் அனுமதி பெற வேண்டும் என்று சொன்னால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. நான் பிரதிவாதிக்கு உதவி செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த தாவாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.1 ஆன உயிலானது வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஒன்று என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து ரமணிக்கு மூதாதையர் சொத்து என்பதால் அதை பொறுத்து அவருக்கு உயில் எழுத எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .